# *Hearty Congratulations and Blessings*

to

My dear Social Service Humanist, **Saravanan ji**. Keep continuing your humanity Service forever to everyone, pleaseService to humanity is service to Divinity. Super and Fantabulous.



*-Principal KSSS*









திருச்செந்தூர் காஞ்சி ஸ்ரீ சங்கரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடந்த முகாமில் ஆர்டிஓ., தனப்ரியா கபசுர குடிநீர் வழங்கினார்.

## காஞ்சி சங்கரா பள்ளியில் பிளஸ் 1 விடைத்தாள் திருத்தும் பணி துவக்கம்

திருச்செந்தூர், ஜூன் 7—

திருச்செந்தூர் காஞ்சி ஸ்ரீ சங்கரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 1 தேர்வு விடைத்தாள் திருத்தும் பணி துவக்கம், மற்றும் கொரானா விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆகியவை நடந்தது.

திருச்செந்தூர் காஞ்சி ஸ்ரீ சங்கரா பள்ளியில் நடந்து முடிந்த பிளஸ்1 அரசு பொதுத் தேர்வுக்கான விடைத்தாள் திருத்தும் பணி துவங்கியது. இதனைத் தொடர்ந்து பள்ளியில் திருச்செந்தூர் கல்வி மாவட்ட சாரணர் இயக்கம் சார்பில் கொரோனா விழிப்புணர்வு முகாம் நடந்தது.

முகாமிற்கு, தலைமை வகித்த திருச்செந்தூர் ஆர்டிஓ., தனப்ரியா பள்ளியின் அனைத்து ஆசிரியர்களுக்கும் கபசுர குடிநீர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சாரண, சாரணிய இயக்க மாவட்ட தலைவர் ரத்தினகுமார் வரவேற்று பேசினார்.

காஞ்சி சங்கரா பள்ளி முதல்வர் செல்வ வைஷ்ணவி முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் கணேசர் மேல்நிலைப் பள்ளி சாரண ஆசிரியர் வேலவர், கமலாவதி மேல்நிலைப் பள்ளி சாரண ஆசிரியர் சரவணன் கலந்து கொண்டு முக கவசம் அணிதல், கை சுத்தம் செய்ய வலியுறுத்தல், சமூக இடைவெளி பின்பற்ற செய்தல் குறித்து விளக்கமளித்தனர்.

சாரண, சாரணிய இயக்க மாவட்ட முதன்மை ஆணையாளரும், மாவட்ட கல்வி அதிகாரியுமான [illegible] அவர்களின் ஆலோசனையின் பேரில் மாவட்ட செயலாளர் செல்வராஜ்சிங் விழிப்புணர்வு முகாமை ஏற்பாடு செய்தார்.